உ
சிவமயம்



மல்லை மாநகர்

# திரு. சுப்பிரமணியம் ஐயாத்துரை

அவர்கள்

சிவபதம் எய்தியமை குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

22-07-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மல்லை மாநகர்

# திரு. சுப்பிரமணியம் ஐயாத்துரை

அவர்கள்

சிவபதம் எய்தியமை குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

22-07-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மையும் எமது குடும்பத்தையும்
ஆளாக்கி அன்பு பொழிந்து
அருள் பொழிந்து
நல் வாழ்வளித்து
தெய்வமாகிவிட்ட
எம் அருமைத் தந்தையாரின்
திருவடிகளுக்கு
இம்மலர்

## சமர்ப்பணம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திரு. சுப்பிரமணியம் ஐயாத்துரை

அவர்கள்



தோற்றம்:
*22 - 07 - 1917*

மறைவு:
*20 - 06 - 1994*

## திதி வெண்பா

சுப்பிர மண்யர் சுதன்ஐ யாத்துரை
ஒப்பிரவி உத்தமன் உற்றனர்— அப்பிரமன்
தோழனாய் ஆனி துவாதசி சாய்பக்கம்
ஆனதே சப்பவ ஆண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைத் திரட்டு

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

### முதலாம் திருமுறை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

### இரண்டாம் திருமுறை

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

### மூன்றாம் திருமுறை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### நாலாம் திருமுறை

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே.

### ஐந்தாம் திருமுறை

திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் திருமுறை

பலவகைத் திருத்தாண்டகம்

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்கனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

ஏழாம் திருமுறை

ஆலந்தான் உகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சிலந்தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார்குழ லாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால கால்னைக் கம்பனெம் மானைக்
காணக்கண் அடியேன் பெற்ற வாறே.

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

எட்டாம் திருமுறை

திருச்சதகம்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

கடையவ னேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல்வேங் கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரா னென்னைத் தாங்கிக்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா

### ஒன்பதாம் திருமுறை

உற்றாய் என்னும் உனையன்றி மற்றொன்று
உணரேன் என்னும் உணர்வுகள் கலக்கப்
பெற்றாய் ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர
வெண்ணீறிடப் பெற்றே னென்றும்
சுற்றாய சோதிமகேந்தி ரம்சூழ் மனத்திருள்
வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

## சேந்தனார் திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றும் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர் அடியார்
அடி நாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தப் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே.

## திருமூலநாயனார் திருமந்திரம்

### பத்தாம் திருமுறை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்

### பதினோராம் திருமுறை

புந்தி கலங்கி மதிமயங்கி யிறந்தவரைப் புறங்காட்டி லிட்டுச்
சந்தியில் வைத்து கடமைசெய்து தக்கவரிட்ட செந்தீ விளக்கா
முந்தி யமரர் முழவினோசை திசைந்துவச் சிலம்பார்க்க வளர்க்க
வந்தியின் மாநடமாடு மெங்களப் பனிடந் திருவாலங் காடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தொண்டர் புராணம்

### பன்னிரண்டாம் திருமுறை

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி யழுவர் மயானம் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவா கச்சி யேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

எல்லோராலும் அன்புக்கும் நல்மதிப்புக்கும் உரியவராக வாழ்ந்து அமரர் சுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களின் மறைவு என்றும் மறக்கமுடியாத ஒரு துன்ப நிகழ்ச்சி. இவர் அளவையூர் கந்தர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் மட்டுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் (மட்டுவில் மாப்பிள்ளை) நன்னிப்பிள்ளைக்கும் ஏக புத்திரனாக 1917-ம் ஆண்டு ஏழாம் மாதம் 22-ம் திகதி தோன்றினார். இவர் இளம் பராயத்திலிருந்தே ஒரு உத்தம குணமுடைய வராக வாழ்ந்து வந்தார். ஆரம்பக் கல்வியைத் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் பின்பு உயர் கல்வியை மகாஜனாக் கல்லூரியிலும் பயின்றார். செந்தமிழும், ஆங்கிலமும் கற்றுத் தேறிய இவர் தனது இருபத்தைந்தாவது வயதில் இருந்து திருகோணமலையில் பிரித்தானிய கடற்படைக் களஞ்சியப் பொறுப்பாளராக பதினாறு வருடங்கள் கடமையாற்றினார். பின்னர் இவரை அரசாங்க தொழில் திணைக்களம் ஏற்று பதினெட்டு வருடங்கள் சேவையில் அமர்த்தியது. தனது முப்பத்தி மூன்றாவது வயதிலே தாய் மாமனாரான திரு. ஆறுமுகம் அண்ணாமலை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியான கனகமணி அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். இவர்களது இல்லறத்தின் நற்பலனாக பல ஆண்டுகளின் பின்னர் பாலகுமார், உதயகுமார் என்னும் இரு அருந்தவப் புதல்வர்களைப் பெற்று மகிழ்ந்தனர். அவர்களில் மூத்த புதல்வர் இரண்டு வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர்களது இல்லற வாழ்க்கையில் சைவப்பணியும் பொதுப்பணியும் மிகுந்து விளங்கியது. விருந்தினரை ஓம்புதலும் உற்றார் உறவினர்களோடு கலந்து பழகுவதும் இவரது வழக்கம். துன்புற்றிருப்போர்க்கு இன்சொல் கூறித் தேற்றும் ஆற்றலும் மிக்க இவர் இரந்தோர்க்கு இல்லையென்னாத குணசீலராகவும் வாழ்ந்தார்.

இவர் 1977-ம் ஆண்டு அரச தொழில் திணைக்களத்தில் நின்றும் ஓய்வு பெற்றார். 1976-ம் ஆண்டு மாமனார் அமரத்துவம் எய்தியதும் அவரது குடும்பப் பொறுப்புக்களை எல்லாம் ஏற்று இனிது நிறைவேற்றியும் வைத்தார். அத்தோடு தனது அன்பு மகனையும் உயர் கல்வியில் தேற்றுவித்து (Keels Hotel Management Service Ltd, Colombo) என்னும் கணக்காய்வாளர் நிறுவனத்தில் கணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்வாளராக உத்தியோகமும் பெற்றுக் கொடுத்தார். தனது மகனைத் திருமணக் கோலத்தில் பார்க்கவேண்டும் என்னும் அவா வினால் கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் புவனேஸ்வரி (கனடா) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி சத்திய பாமாவை மருமகளாக ஏற்று கொழும்பு மாநகரிலே அக்கோலம் கண்டு மகிழ்ந்தார். தனது மகனும் மருமகளும் மேலைநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று கனடா நாடு சென்றதும் சொந்த இடமாகிய மல்லாகத்தில் இருக்கும் இல்லத்திற்குத் திரும்பினார். இருதிங்களில் யாவரையும் மறந்து இவ்வுலக வாழ்வை நீத்தார்.

விதி வலிது என்பார்கள். விதியை வென்றோர் இப்பிரபஞ்சத்தில் யாருமில்லை, இந்த உடம்பு நிலையற்றது, வாழ்வாவது மாயம், அது மண்ணானது திண்ணம் என்றும், முடிசாய்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடிசாம்பர் ஆவர் என்றும், காயமே இது பொய்யடா காற்றடைந்த வெறும் பையடா என்றும் இந்த உடம்பின் நிலையாமையை வலியுறுத்தி மறைந்துள்ளார்கள் பல அறிஞர்கள். எனவே பிறந்தவர் எவரும் இறந்தேயாகவேண்டுமென்பது உலக நியதி. இந்த நியதியைப் பின்பற்றி எங்கள் அமரர் ஐயாத்துரை அவர்களும் சிறிது காலம் வாழ்ந்து தனது ஆருயிர் நாயகியையும், அருமை மகனையும், மருமகளையும் உற்றார் உறவினர்களையும் மறந்துவிட்டார்.

எமது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய தந்தையாரின் ஆத்மா பரிபூரணமாக சாந்தி அடைவதற்கும் அவரது பிரிவால் துயருறும் மனைவி, மகன், மருமகள், மைத்துனர், மைத்துனியர், மருமக்கள், பேராமக்கள், உற்றார், உறவினர்கள் மனச் சாந்தி பெறுவதற்கும் எல்லாம் வல்ல இறைவனின் நல்லருள் கிடைப்பதாக.

ஓம் சாந்தி!

## தேற்ற வெண்பா

நன்னெறியில் வாழ்ந் தாய் நன்னிப்பிள் ளைபோல
புன்னெறி சற்றுமின்றிப் பொன்மலராய் - செந்நெறியில்
ஐயாத் துரைமகன் ஆண்டனர் ஏன்துயர்
மெய்ஆதி காப்பார் வியந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் பொலிந்தவர்

பழம்பெரும் புகழுடன் விளங்கும் எங்கள் பரம்பரைச் சுற்றம் ஒரு பன்மணி மாலை போல்றது. அதிலே ஒரு நன்மணி, எமது உற்ற உறவினர் அளவை-மல்லை அமரர் சுப்பிரமணியம் ஐயாத் துரை அவர்கள். களங்கமற்ற உளங்கனிந்து யாவரும் நட்பினரென மேவி வாழ்ந்தவர். குணநலம் குன்றாத கோலம் பூண்டவர். குலநல எழிலால் அத்தகு புத்திரர் பாக்கியம் பெற்று வாழ்ந்தனர். அகநக நட்பு அனைவருடன் பூண்டு மிகவேண்டியவராக விளங்கினர். அத்தகையவர் எனது நித்திய நினைவில் இருக்கும் தகைமை வாய்ந்தனர். பொய் யாதுமின்றி மெய்யே தனமென வாழ்ந்த ஐயா, துரைமகனே!


இங்ஙனம்
நம. சிவப்பிரகாசம்
பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியும்
J. P. U. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி


பரநிருபசிங்க மன்னன் வழிவந்த கயிலாய உடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபு

யிலாய உடையார் ( வென்றரசு கொன்ற மாமுதலி )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவன் அமரத்துவம் அடைந்த
செய்தி அறிந்து வருகைதந்து இறுதிக் கிரியைகளிற்
கலந்து கொண்டவர்களுக்கும், இரங்கற் செய்திகள்
அனுப்பியவர்களுக்கும், மலர்மாலை வழங்கியவர்களுக்கும்,
உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்,
அந்தியேட்டிக் கிரியையின்போது சமூக
மளித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை
செய்யும் அனைவருக்கும், இம்மலரை ஆக்க
உதவிய உறவினர் திரு. நம. சிவப்பிரகாசம்
அவர்களுக்கும் எமது இதயபூர்வமான
நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மகன்,
மருமகன், மைத்துனர்

மல்லாகம்.
22-07-1994.



மஹாத்மா அச்சகம், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org